# "நானே திராட்சச்செடி"

# (15:1–16:4)

*நார்மன் ராக்வெல் என்பவரின் சித்திரத்தினுடைய ஒரு அச்சுப் பிரதியானது எனது படிப்பறைச் சுவரில் தொங்குகின்றது. இது, நாம் யாவரும் ஏதாவது ஒரு வழியில் அனுபவித்துள்ள ஒரு கதையைக் கூறுகின்றது: வீட்டை விட்டுச் செல்லுதல் பற்றிய கதை. படத்தில், பழைய, பழுதான குடும்ப வண்டியொன்றில் மகனுக்குப் பக்கத்தில் தந்தை அமர்ந்துள்ளார், அவ்விருவரும் அம்மகனைக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லும் பேருந்து ஒன்றிற்காகக் காத்துள்ளனர். தந்தை விவசாயியின் வேலை நேர உடையை அணிந்துள்ளார், மகன் சூட்டும் டையும் அணிந்துள்ளான். தந்தை வயது முதிர்ந்தவராக, தளர்வுற்றவராக மற்றும் கவலைமிக்கவராகக் காணப்படுகின்றார். மகன் இளமையானவனாக, சக்திமிக்கவனாக, உலகைக் காணத் தயாரானவனாகக் காணப்படுகின்றான். படத்தில் கவலையின் சாயல் ஒன்று உள்ளது; இது ஒரு "பிரிவு - உபசாரம்" என்று அறிந்து, அந்த இளம் மனிதனின் காலில் முறையிடும் வகையில் தலையை வைத்திருந்த குடும்பத்தின் நாய்க்காகவும், தந்தைக்காகவும் இதைக் காணும் ஒருவர் வருத்தம் அடைவார். சில வேளைகளில் நான் இந்தச் சித்திரத்தைக் காணும் பொழுது, என்னை அந்த இளம் மனிதனாய் அடையாளப்படுத்திக் கொள்ளுகின்றேன். இந்த நாட்களிலோ, மிகவும் அடிக்கடி நான் என்னை அந்தத் தந்தையாய் அடையாளப்படுத்திக் கொள்ளுகின்றேன். சில வேளைகளில் நான் என்னை அந்த நாயாகக்கூட அடையாளப்படுத்திக் கொள்ளுகின்றேன்!*

*ராக்வெல்லின் சித்திரமானது கேட்கும் கேள்விகளில் ஒன்றாகக் காணப்படுவது, "அந்தத் தந்தை என்னத்தைச் சிந்திக்கின்றார்?" என்பதாகும். பேருந்து வருகின்ற பொழுது, இருவரும் எழுந்து நிற்பார்கள், தந்தை, "இப்பொழுது நீ எச்சரிக்கையாய் இருக்க வேண்டும், நீ கேட்கிறாயா?" என்றோ அல்லது "மகனே, உன் அம்மாவுக்கு கடிதம் எழுது. அது அவளுக்கு மிகுந்த ஆறுதலாய் இருக்கும்" என்றோ கூறுவார் என்பதாக நான் கற்பனை செய்கின்றேன். இருப்பினும், அவரது இருதய ஆழத்தில் உள்ள உணர்வுகளின் மீது நான் ஆர்வம் கொள்வதைக்காட்டிலும் அதிகமாக அவருடைய வார்த்தைகளில் நான் ஆர்வம் கொள்வதில்லை. அவர் தம் மகன் முன்பாக வரக் காத்திருந்தது என்ன என்று வியந்திருக்கலாம் என்று நான் கற்பனை செய்கின்றேன். அவன் தயாராக இருக்கின்றானா? அவன் நல்ல நண்பர்களைப் பெறுவானா? இருதய வலியை எவ்விதம் கையாளுவது என்று அவன் அறிவானா? வெற்றியினால் அவன் மாற்றப்படுவானா?*

இவ்வுலகத்தில் தேவைப்படும் எல்லாவற்றையும் அவனது தந்தை அவனுக்குக் கற்பித்திருக்கின்றாரா?

பேருந்து நிறுத்தத்தில் தந்தையும் மகனும் இருப்பது போன்ற ராக்வெல்லின் சித்திரத்தில் உள்ள உருவகமானது நாம் நமது பாடத்தைப் படிப்பதற்கும் நம்மை நன்கு தயார் செய்கின்றது. யோவான் 13 முதல் 17 வரையுள்ள அதிகாரங்கள் சிலுவைக்கு முன்பு இயேசுவின் கடைசி நேரங்களில் நடந்தவற்றைப் பதிவு செய்கின்றன. அதிகாரம் 13ல் அவர் சீஷர்களின் பாதங்களைக் கழுவினார், மற்றும் அதிகாரம் 14ல் அவர்களின் பயங்களை அவர் அமைதிப்படுத்தினார். 15:1-16:4 என்ற இந்த வேதப் பாடப் பகுதியில், சீஷர்களை எதிர்கொள்ளவிருந்த கலக்கத்திற்காக அவர்களை அவர் எவ்விதத்தில் தயார்ப்படுத்தினார் என்று நாம் காண்போம். அவர் தாம் இல்லாமல் அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்த மூன்று பிரச்சனைகளை முன் அனுமானித்ததன் மூலம் இதைச் செய்தார்.

## பிரச்சனை ஒன்று: மனிதர்களிடமிருந்து துன்புறுத்துதல் (15:18-16:4)

யாரேனும் ஒருவர் உங்கள் மேல் விருப்பமில்லாமை அல்லது வெறுப்புக்கூடக் கொண்டவராக இருப்பதையும் அதற்கான காரணம் என்னவென்று நீங்கள் அறியாமலும் இருந்ததுண்டா? எனது சகோதரிகளில் ஒருத்தி கல்லூரியில் இவ்வித அனுபவத்தைப் பெற்றிருந்தாள். சக மாணவர்களில் ஒருவர் அவளை வெறுப்பது போன்று பார்ப்பதை அவள் கவனிக்கத் தொடங்கினாள், ஆனால் அந்த நபர் யாரென்று கூட அவள் அறிந்ததில்லை. சில வேளைகளில் நடைபாதையில் அவர்கள் ஒருவரை ஒருவர் கடந்து செல்வதுண்டு, அப்பொழுது எனது சகோதரி புன்முறுவல் செய்து அமைதியாக/சாந்தமாக “ஹலோ” என்று கூறுவாள். இருப்பினும், அவர் வெறுப்புடன் நோக்கி விட்டு, சலிப்புடன் தலையைச் சாய்த்துக் கொள்வார். இந்த வினோதமான சூழ்நிலை பற்றி அவள் தன் நண்பர்களிடம் கூறினாள், ஆனால் அது அவளுடைய கற்பனையாய் இருக்கும் என்று அவர்கள் நினைத்தனர்.

ஒரு நாள் இன்னொரு ஜோடியும் அவர்களின் நண்பராய் இருந்த வாலிபர் ஒருவரும் எனது சகோதரியை ஒரு “சாதாரண சந்திப்பிற்காக” அழைத்தனர். அவள் ஒப்புக் கொண்டாள். சந்திப்பின் இரவு வந்த பொழுது, அவளுடன் சந்திக்க விருந்த அந்த இளைஞன் வேறு யாருமல்ல, அவளை வெறுப்புடன் நோக்கிய அந்த இளைஞன் தான் என்பது அறியப்பட்டது! அன்று மாலை அது ஒரு விபத்துப் போன்றிருந்தது! அவன் அவளை வெறுப்பது போன்று தோன்றியது மட்டுமின்றி, அவன் உண்மையில் அதையே செய்தான். அவன் சாந்தமாகவோ அல்லது இரக்கமாகவோ எதையும் பேசவில்லை, மற்றும் அந்த சந்திப்பை மகிழ்வுடன் அனுபவிப்பதற்குக்கூட அவன் எதையும் செய்வதற்கு முயற்சிக்கவில்லை. இவை எல்லாவற்றினாலும் எனது சகோதரி பெரும் திகைப்புக்குள்ளானாள். இந்த நபரை மனம் புண்படும்படியாகத் தான் எதையும் செய்திருந்ததாக அவள்

அறியவில்லை, இருப்பினும் இவன் அவளை தனது மோசமான எதிரியைப் போல நடத்தினான். அந்த இளைஞன் பள்ளிக்குச் செல்லப் புறப்படுமுன் அவனது சொந்த ஊரில் அவனுடைய இருதயத்தை உடையச் செய்த அவனுடைய பழைய பெண் தோழியைப் போன்று என் சகோதரி இருந்ததாக சில காலத்திற்குப்பின் அவள் அறிந்து கொண்டாள்!

நமது வேதபாடப்பகுதியில், இயேசு தம்முடைய சீஷர்களுக்கு எதிர் வர இருந்த கடினமான வேளைகளைப் பற்றி எச்சரிக்கை செய்தார். விரைவிலேயே அவர்கள் எனது சகோதரியைப் போலவே பெரும் திகைப்புக்கு ஆளாக இருந்தனர்! இயேசு அவர்களை இந்த வேதனை நிறைந்த அனுபவத்திற்குப் பல வழிகளில் தயார் செய்தார். முதலாவதாக அவர், உலகம் அவர்களை வெறுக்கும் பொழுது முதலில் அது தம்மை வெறுத்தது என்பதை அவர்கள் நினைவுகூர வேண்டும் என்று கூறினார் (15:18). அவர்கள் தம்முடைய சீஷர்களாய் இருக்கும் காரணத்தினால், அவர் பெற்ற அதே வகையான உபசரணயைத்தான் அவர்களும் எதிர்பார்க்க முடியும் (15:20). உலகம் அவரைக் கவனித்திருந்தால், அவர்களையும் கவனிக்கும். இருப்பினும், உலகமானது பொதுவாக அவரை உபத்திரப் படுத்தியிருந்ததால், அதையே அவர்களுக்கும் செய்யும் என்று அவர்கள் எதிர்பார்க்க முடியும்.

உலகத்தினால் உண்டாகும் உபத்திரவம் "தனிப்பட்டது" அல்ல ஆனால் அவர்கள் இயேசுவின் பின்பற்றாளர்களாய் இருப்பதால் அது அவர்களுக்கு வருவதாயிருக்கும் என்று இயேசு கூறினார் (15:21). அவரையும் அவரது சீஷர்களையும் வெறுத்தவர்கள் பிதாவையும் வெறுத்தார்கள் என்பதைத் தம்முடைய சீஷர்கள் அறிய வேண்டும் என்று அவர் விரும்பினார் (15:23). அணுகிக் கொண்டிருந்த உபத்திரவமானது அறிவுக்கேற்ற கருத்தெதையும் ஏற்படுத்தாது என்பதே அதைப் பற்றிய அதிகம் மனக்கவலைக்குரிய விஷயமாகும் என்று இயேசு அறிந்தார்! அது "காரணம் இல்லாததாக" இருக்கும் என்பதை அவர் முன்னோக்கினார் (15:25). அது வருவதற்கு முன்பாகவே அதைப் பற்றி அறிவது என்பது சீஷர்கள் அதை இன்னும் தாங்கிக் கொள்ளக் கூடியவர்களாக்கும் என்று அவர் நம்பிக்கையாய் இருந்தார்.

சீஷர்கள் ஜெப ஆலயங்களில் இருந்து வெளியேற்றப்படுவதையும் எதிர்பார்க்க முடிந்திருந்தது.[1] இயேசு அவர்களை எச்சரித்தவைகள் யாவற்றிலும், பின்வரும் கூற்றே மிகுந்த வேதனை நிறைந்ததாக இருக்கலாம்: "உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்" (16:2). இயேசு தாம் சிலுவையில் அறையப்படுவதற்கு முந்திய மாலையில் அவர்களுக்கு இவ்விதமான பெரும் மனக்கவலை ஏற்படுத்தும் செய்தியை ஏன் கொடுத்தார்? துன்பவேளை வரும்பொழுது அவர்கள் இடறி விழுந்து விடாதபடி அவர்களைத் தயார் செய்வதே அவருடைய நோக்கமாய் இருந்தது(16:1). இப்படிப்பட்ட துன்பங்களைப்பற்றி இயேசு எச்சரித்திருந்தார் என்பதை அவர்கள் நினைவுகூர்ந்தால், அவர்கள் உள்ளம் கலங்க மாட்டார்கள் (16:4). அவர்களை உற்சாகப்படுத்தவும் அறிவுறுத்தவும்

இயேசு அவர்களுடன் இருந்த வேளையில், அவர்களுக்கு இவ்வித எச்சரிக்கைகள் எதுவும் தேவைப்படவில்லை. அவர்களை விட்டுச் செல்ல அவர் தயாரான பொழுது, அவர்களின் ஆவிக்குரிய உயிர் வாழ்வுக்கு இந்த போதனைகள் அவசியமானவைகளாய் இருந்தன.

இன்றைய நாட்களில் இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நமது சூழ்நிலையானது வித்தியாசப்பட்டதாக இருந்தாலும், நாமும் கூட நாம் எதிர்கொள்ள வேண்டிய இடர்ப்பாடுகள் பற்றிய அவருடைய வசனங்களைக் கேட்பது அவசியமானதாக உள்ளது. உலகின் சில இடங்களில் இன்று கிறிஸ்தவர்களை எதிர்கொள்ளும் எதிர்ப்பு என்பது மிகவும் கடுமையானதாக உள்ளது. அவர்கள் அடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்படுகின்றனர். அவர்களின் இல்லங்கள் எரியூட்டப்படுகின்றன, அல்லது அவர்கள் சபை கூடி வருதல்கள் தடை செய்யப்படுகின்றன. இந்தக் கிறிஸ்தவர்கள் இவ்வசனப்பகுதியில் இயேசுவின் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள முடியும். முதலாவது இயேசு தாமே துன்புற்றார் என்பதால், இவர்கள் தங்கள் துன்பம் பற்றி வியப்படையக் கூடாது என்று அறிகின்றனர்!

மற்ற கிறிஸ்தவர்கள் உடல் ரீதியான துன்புறுத்தலை விட அதிகமான சமூக ரீதியான துன்புறுத்தலை எதிர்கொள்கின்றனர். அவர்கள் அடிக்கப் படாதிருப்பினும், தங்கள் நம்பிக்கைகளுக்காகக் கடிந்து கொள்ளப்பட்டு மற்றும் தங்கள் உறுதிப்பாட்டிற்காக ஏளனம் செய்யப்பட்டிருக்கலாம். திரைப்பட விமர்சகரான மிகயீல் மெட்வெட் என்பவர் 1992ம் ஆண்டில், ஹாலிவுட்டுக்கு எதிராக அமெரிக்கா என்று அழைக்கப்பட்ட ஒரு நூலை வெளியிட்டார், அதில் அவர், திரைப்படம் தயாரிக்கும் தொழிலானது மதத்தையும் மதநம்பிக்கைகளையும் சிறுமைப்படுத்த எவ்விதம் ஒவ்வொரு வாய்ப்பையும் பயன்படுத்தியது என்று செயல்விளக்கப்படுத்தினார். பிற்பாடு அவர் ஹாலிவுட்டுக்கு எதிராக மதம் என்று அழைக்கப்பட்ட ஒலி - ஒளிப் பேழை ஒன்றை(வீடியோவை)த் தயாரித்தார். அந்தப் புத்தகம் மற்றும் ஒலி - ஒளிப் பேழை (வீடியோ) ஆகிய இரண்டிலும் அவர், ஹாலிவுட் திரைப்படத் தயாரிப்பாளர்கள் தங்களுக்கு ஏகப்பட்ட வருமான இழப்பு ஏற்படக் காரணமாயிருந்தாலும், தேவனை நம்புகிறவர்கள்மேல் தாக்குதல் தொடுக்கவே நோக்கமாய் இருந்தார்கள் என்று எடுத்துரைத்தார்.

சில வேளைகளில் உபத்திரவம் என்பது கிறிஸ்தவரின் சொந்த இல்லத்திற்குள்ளாகவே மிகவும் வலிவானதாக உள்ளது. ஒரு கணவரோ அல்லது மனைவியோ, விசுவாசிக்கின்ற தமது துணையாளரின் விசுவாசத்தை விமர்சித்து சிறுமைப்படுத்தலாம். இவ்வகையானது உபத்திரவமானது தாங்குவதற்கு மிகவும் கடினமானதாகும். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவரல்லாத தங்கள் துணையாளர்களுடன் (கணவருடன் அல்லது மனைவியுடன்) நிலைத்திருக்கும்படி அறிவுறுத்தப்பட்டிருப்பினும், கிறிஸ்தவர் ஒருவர் கிறிஸ்தவரல்லாத ஒருவரை திருமணம் செய்து கொள்ளுதல் என்பது நினைத்துப் பார்க்க முடியாததாக இருந்தது என்பதற்கு இதுவே நிச்சயமான காரணமாக உள்ளது (1 கொரி. 7:12-16, 39).

பவுல் - தாமே உபத்திரவத்துக்கு அந்நியராய் இராத வகையில் -

ரோமாபுரியில் இருந்த சபைக்கு, "கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்" (ரோமர் 12:18) என்று எழுதினார். இவ்வசனத்தின் முதல் மூன்று வார்த்தைகள், சமாதானத்துடன் வாழ்வது என்பது எல்லா வேளைகளிலுமே நமது சக்திக்குட்பட்டதாக இருப்பதில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. ஆவிக்குரிய வகையில் நமது எதிராளிகள் சில வேளைகளில் விஷயத்தைச் சும்மா விட்டு விடமாட்டார்கள், மற்றும் நாம் உபத்திரவத்தை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். இதைப்பற்றி நாம் திகைப்படையக் கூடாது, நாம் இயேசுவின் பாடுகளையும், அவரைப் பின்பற்றுவதில் நாமும் கூடத் துன்புறுவோம் என்ற அவருடைய எச்சரிக்கையையும் நினைவுகூர வேண்டும். அவருடைய வார்த்தைகளே நாம் இடறி விழாமல் நம்மைப் பாதுகாப்பவைகளாய் உள்ளன!

## பிரச்சனை இரண்டு: இயேசுவிடமிருந்து பிரிதல் (15:1-8)

முடிவில் இருந்து தொடங்குவதன் மூலம் நாம் நமது வேத பாடப் பகுதியை வழக்கத்திற்கு மாறான வகையில் அணுகியுள்ளோம் என்பது தெளிவு. இயேசு முன்பே குறிப்பிட்டிருந்த உறவின் அவசரத்துவம் பற்றி நாம் உணர்ந்தறியும்படியாக இந்தப் பிரச்சனை எடுத்துரைக்கப்பட்டதைக் காண்பதே இதைச் செய்வதற்கான காரணமாக உள்ளது. இல்லையென்றால், இந்தப் பகுதியை நாம் உற்சாகத்திற்குரிய ஒரு ஆவிக்குரிய பாடமாகக் காணத் தலைப்பட்டு, உபத்திரவத்தின் பிரச்சனையிலிருந்து இது விலகியிருப்பதாக நினைக்க முற்படுவோம். இதன் விளைவாகவே, இந்த அதிகாரத்தின் முடிவிலிருந்து நாம் தொடங்கினோம், மற்றும் இப்பொழுது நாம் தொடக்கத்திற்குத் தயாராக உள்ளோம்.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு, "நான் மெய்யான திராட்சச் செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்" (15:1) என்று உரைத்தார். யோவான் சுவிசேஷத்தில் "நானே" என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஏழு கூற்றுக்களில் இது கடைசியானதாக உள்ளது. திராட்சச் செடி மற்றும் அதன் கிளைகள் என்ற விஷயமானது பிதா குமாரன் மற்றும் குமாரனுடைய சீஷர்கள் ஆகியோரிடைய உள்ள உறவுக்கு ஒரு ஒப்புவமையாகப் பணியாற்றுகின்றது. இயேசு திராட்சச் செடியாக இருக்கின்றார், பிதாவானவர் விவசாயியாக (அல்லது தோட்டக்காரராக, அல்லது திராட்சத் தோட்டக்காரராக) இருக்கின்றார், மற்றும் சீஷர்கள் கிளைகளாக இருக்கின்றனர். இந்தக் கிளைகள் உற்பத்தி செய்கின்ற கனிகளாய் இருக்க வேண்டியவை சீஷர்களின் வாழ்வில் உள்ள தேவபக்திக்கேற்ற நடக்கையாக உள்ளது.

இந்த ஒப்புவமையில், இயேசுவின் செய்தியானது கிளையானது வளருகையில், தான் வளரும் திராட்சச் செடியுடன் நெருக்கமாய் இருப்பது போன்று, அவருடன் நெருக்கமாய்த் தொடர்பு கொண்டிருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைக் கவனப்படுத்துகின்றது. அவ்விதம்

செய்யத் தவறுதல் என்பது விரைவிலேயே மரணத்தைக் கொண்டு வருகின்றது. திராட்சச் செடியில் நிலைத்திருத்தல் ஒன்றே கனி கொடுப்பதற்கான ஒரே வழியாக உள்ளது, மற்றும் கனி கொடுக்கத் தவறுதல் என்பது மரணத்தைக் கொண்டு வரும். கனி தராத கொடிகள் திராட்சத் தோட்டக்காரரால் (வெட்டி) எடுக்கப்பட்டு எரியூட்டப்படுகின்றன என்று இயேசு சுட்டிக் காண்பித்தார் (15:6). மேலும் அவர், கனி தரும் கொடிகளைத் திராட்சத்தோட்டக்காரர் கண்டறிந்து, அவைகள் அதிகக் கனி கொடுக்கும்படியாக அவைகளைச் சுத்தம் பண்ணுகிறார் என்றும் எடுத்துரைத்தார் (15:2). இந்த அதிகாரத்தின் தொடக்க வசனங்களில், சுத்தம் பண்ணுதலைப் பற்றிய கலந்துரையாடலானது, இயேசுவைப் பின்பற்றுதல் என்பது சீஷர்களுக்கு எதிர் காலத்தில் வேதனை நிறைந்ததாய் இருக்கும் என்பதைக் குறிப்பாய் உணர்த்தியது.

இயேசுவில் "நிலைத்திருத்தல்" என்பது சீஷர்களுக்கு முக்கியமான தாயிருந்ததென்று அவர் வலியுறுத்தினார். ஏழு வசனங்களில் (15:1-7) இயேசுவின் வாயிலிருந்து "நிலைத்திருத்தல்" என்ற வார்த்தை ஏழு முறை வெளி வந்ததாகக் காணப்படுகின்றது. அது "தொடர்ந்து" அல்லது "இருந்து" என்று அர்த்தப்படுகின்றது. கிளையானது செடியில் இருந்து தனக்குச் சத்துக்களைப் பெற்றுக் கொள்வது போல, சீஷர்களும் தங்கள் வாழ்வாதாரத்தை இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்டனர். அதை அப்படிப்பட்ட இடர்ப்பாடு மிக்க வேளையில் மறந்து விடுதல் என்பது அவர்களுக்குப் பேரழிவாய் இருக்கக் கூடும். அவர்கள் செடியிலிருந்து பிரிந்திருந்தால், மரித்தவர்களாகி திராட்சத் தோட்டத்தைக் கவனித்துக் கொள்கிற ஒருவரால் எரியூட்டப்படுவார்கள்.

அடுத்த இருபத்தி நான்கு மணிகளுக்குள் இயேசுவின் சீஷர்கள் மாபெரும் வேதனையை எதிர்கொள்வார்கள், மற்றும் அவர்கள் பல தெரிவுகளைக் கொண்டிருந்தனர். இயேசுவின் பின்பற்றாளர்கள் என்ற வகையில் (அந்த சீஷர்களைப் போலவே) நாமும் உடல்ரீதியான எதிர்ப்பை எதிர்கொள்ளா விட்டாலும், ஆவிக்குரிய எதிர்ப்பை எதிர்கொள்ளுவோம் - மற்றும் நாமும் கூட தெரிவுகளைக் கொண்டிருப்போம்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் விட்டு விலகி விடக் கூடும்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் காட்டிக் கொடுக்கப்பட்டதாக உணரக் கூடும்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் நமது அடையாளங்களை மாற்றக் கூடும்.

இயேசுவினிமித்தம் நாம் வெறுக்கப்படும் பொழுது, நாம் திராட்சச் செடியிலேயே இணைந்திருக்கக் கூடும்!

## பிரச்சனை மூன்று: அன்பின் அவசியம் (15:9-17)

சீஷர்கள் திராட்சச் செடியில் "நிலைத்திருத்தலோடு" கூட அன்பில்

*''நிலைத்திருக்கும்''படியாகவும் அழைக்கப்பட்டனர். அன்பு என்பது இயேசுவைப் பின்பற்றுகின்றவர்களுக்கு மிக முக்கியமானதாக உள்ளது! முன்பு, சீஷர்களின் பாதங்களைக் கழுவியதன் மூலம் இயேசு தம்முடைய போதனையில் அன்பு என்பது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் செயல்விளக்கப்படுத்தினார். அந்த வேளையில் அவர் பின்வருமாறு கூறியிருந்தார்:*

> *நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள் (13:34, 35).*

*"நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்'' என்பதை இயேசு ''எனது கட்டளை'' என்று முக்கியத்துவம் வாய்ந்ததாகக் குறிப்பிட்டார் (15:12). தேவன் மீதான அன்பு மற்றும் ஒருவரிலொருவர் மீதான அன்பு என்பதே சுவிசேஷச் செய்தியின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது (மத். 22:34-40). யோவான் சுவிசேஷத்தின் இப்பகுதியில் அன்பு வலியுறுத்தப்படுவதாகவும் உள்ளது. முதல் பன்னிரெண்டு அதிகாரங்களில் "அன்பு" என்ற வார்த்தையானது ஆறுமுறை மட்டுமே காணப்படுகையில், அதிகாரங்கள் 13 முதல் 17 வரையிலும் இவ்வார்த்தையானது முப்பத்தியொரு முறை காணப் படுகின்றது என்று C. H. டோட் அவர்கள் கவனித்துள்ளார்![2]*

*இவ்வசனப் பகுதியில் உள்ள "அன்பு" என்பது உணர்வு வயப்படும் விஷயம் அல்ல. மாறாக, இயேசு சிலுவையில் தமது மரணத்தில் மிகச் சிறந்த வகையில் காணப்படும் அன்பின் வகையைக் குறிப்பிடுவதாகத் தெளிவு படுத்தினார். "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (15:13) என்று இயேசு கூறிய பொழுது அவர் அர்த்தப்படுத்தியது என்ன என்பதை (அந்த) சீஷர்கள் அநேகமாய்ப் புரிந்து கொள்ளாதிருந்தாலும், அவர் அடுத்த நாளில் நடைபெற இருந்த தமது மரணத்தைப் பற்றியே பேசினார் என்பது நிச்சயம் என்று நீங்களும் நானும் காண முடியும். அன்று போலவே இன்றும் அவருடைய சீஷர்கள் அவரது அன்பின் எடுத்துக்காட்டைப் போலச் செய்ய, இயேசுவைச் சிலுவைக்கு வழிநடத்திய அந்த அன்பைப் போலவே செய்ய இப்பொழுதும் அழைக்கப்படுகின்றனர்.*

## முடிவுரை

*இயேசுவைப் பின்பற்றத் தைரியமாய் முன் வருபவர்கள் (மற்றவர் களால் தாங்கள்) உபத்திரவத்தை எதிர்பார்க்கும் நிலையில் உள்ளனர் என்று இயேசு எச்சரித்திருக்கின்றார். கிறிஸ்தவர்கள் அனைவருமே நமது விசுவாசத்தினிமித்தமாக ஏதோ ஒரு வகையில் உபத்திரவத்தை எதிர்*

கொள்ளுகின்றோம். அது நடைபெறும் பொழுது, நாம் என்ன செய்ய வேண்டும்? "திராட்சச் செடியில் நிலைத்திருங்கள்" மற்றும் "ஒருவரை யொருவர் அன்புகூருங்கள்" என்பதே இயேசு நமக்குக் கொடுக்கும் பதில்களாய் உள்ளன.

இயேசு இந்த அறிவுறுத்தல்களைக் கொடுத்த மறுநாளில், இவ்வுலகம் கண்டவற்றிலேயே அன்பிற்கான மாபெரும் செயல்விளக்கம் ஒன்றைக் காட்ட அவர் சிலுவைக்குச் சென்றார். இருப்பினும், அவர் பதிலுக்கு அன்பு காட்டப்படவில்லை. அதற்குப் பதிலாக, அவர் சபிக்கப்பட்டார், துப்பப்பட்டார், அடிக்கப்பட்டார், சிறுமைப்படுத்தப்பட்டார், மற்றும் கொல்லப்பட்டார். அது இவ்வுலகம் கண்டவற்றிலேயே மிகவும் பகுத்தறி வற்ற வெறுப்புணர்வின் பயங்கரமான காட்சியாக இருந்தது. இப்படிப் பட்ட சித்தங் கலங்கிய வேளையிலும் கூட, இயேசு விசுவாச நிறைவையும் அன்பையும் செயல்விளக்கப்படுத்தினார். அவர் உபத்திரவத்தை எதிர்கொண்டு, அதை மேற்கொள்ளும் வழியை நமக்குக் காண்பித்தார்.

நான் வாழ்கின்ற இடத்தில், வழக்கத்திற்கு மாறான மோசமான நாள் ஒன்றை நாங்கள் எதிர்கொள்ளுகையில் நாங்கள் பயன்படுத்தும் வழக்குச் சொல் ஒன்றுண்டு. நாங்கள், "இது போன்ற நாட்கள் வரும் என்று என் அம்மா எப்பொழுதும் கூறுவதுண்டு" என்று கூறுவோம். கிறிஸ்துவின் நாமத்தை அணிந்துள்ள சிலாக்கியத்திற்காக நாம், கடினமான ஒரு விலைைச் செலுத்தும்படி அழைக்கப்பட்டால், நாமும் கூட அதே வழிமுறையில் "இது போன்ற நாட்கள் வரும் என்று எனது கர்த்தர் கூறினார்" என்று சொல்ல முடியும். உபத்திரவம் வரும் என்று அவர் கூறியது மட்டுமின்றி, அது வருகின்ற பொழுது என்ன செய்ய வேண்டும் என்றும் அவர் நமக்குக் கூறியுள்ளார்: திராட்சச் செடியில் நிலைத்திருங்கள், ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்!

---

குறிப்புகள்

[1]9:22, 34, 35ஐக் காணவும். ஜெப ஆலயத்தை விட்டு வெளியேற்றப்படுதல் என்பது தொழுகைக் கூடத்திலிருந்து தற்காலிகமாய் வெளியேற்றப்படுதலை விட அதிகமானதாக இருந்தது. ஜெப ஆலயம் என்பது சமுதாயத்தின் சமூக மற்றும் மத மையமாய் இருந்தது. ஒருவர் தம் சொந்தக் குடும்பம் மற்றும் மக்களிடமிருந்து பிரிக்கப்படுதல் என்பது இயேசுவைப் பின்பற்றுவதற்குச் செலுத்தும் வேதனை நிறைந்த விலையாக இருக்கும். [2]C. H. Dodd, *The Interpretation of the Fourth Gospel* (Cambridge: The University Press, 1958), 398.